# சுடர் ஒளி
THE SUDAR OLI
சுடர் ඔළි
விலை 10/=
29.07.2020 புதன்கிழமை




# கொரோனாப் பேரலை விரைவில் தாக்கும்!

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

ஜெனீவா, ஜூலை 29
உலக நாடுகள் தற்போது எதிர்கொண்டிருப்பது கொவிட்19 எனும் கொரோனாவின் முதல் அலைதான். ஆனால் மிகப் பெரிய கொரோனா அலை இனிமேல்தான் தாக்கும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் அதிகாரியான மார்க்ரெட் ஹாரிஸ் (Margaret Harris) ஜெனீவா

6

## ஐவருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 29
இன்று காலை 6.00 மணிய ளவில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 5 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொவிட் 19 தடுப்புக்கான தேசிய செயற் பாட்டு மையம் வெளியிட்டு ள்ள ஊடக அறிக்கை யில் இது தொடர்

6

## சங்கிலி அபகரிப்பு

சாவகச்சேரி, ஜூலை 29
வீதியில் சென்ற இளைஞரை வழிமறித்து தாக்கிய சிலர், அவர் அணிந்திருந்த தங்கிச் சங்கிலியையும் அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி

6

## தூக்கில் தொங்கி ஒருவர் மரணம்

சாவகச்சேரி, ஜூலை 29
தவறான முடிவெடுத்தவர் தூக்கில் தொங்கி சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நுணாவிலில் இன்று இடம்பெற்றுள்ளது.இதே இடத்தைச் சேர்ந்த.தங்கராசா சந்துரு (வயது 35 ) என்பவரே இவ்வாறு சாவடைந்தவராவார். இவரின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச் சேரிப் பொலிஸார்

6

## தேர்தல் கடமையில் 84 ஆயிரம் பொலிஸ்!

கொழும்பு, ஜூலை 29
எதிர்வரும் பொதுத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக சுமார் 84 ஆயிரம் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரை பணியில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய

6

# ஈ.பி.டி.பி. படுகொலை கும்பல்

## அதன் முன்னாள் உறுப்பினர் என்று அடையாளப்படுத்தியவர் "பகீர்" தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 29
கொலைகள், கடத்தல்கள் அனைத்தும் செய்தவர்கள் ஈ.பி.டி.பியினர்தான். அவர்கள் செய்துவிட்டு விடுதலைப் புலிகள் மீதும், இராணுவத்தினர் மீதும் குற்றஞ்சாட்டுவர். தினமுரசு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அற்புதன் நடராசா ரமேஸை விடுதலைப் புலிகள் கொலை செய்யவில்லை. ஈ.பி.டி.பியினரே கொலை செய்தனர். உதயன் பத்திரிகை மீதான தாக்குலையும் ஈ.பி.டிபியினரே மேற்கொண்டனர்.

6

## இலஞ்சம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 29
அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறும் வீதம், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் அதிகரித்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது. வருடத்தின் இதுவரையான காலப்

6

## புதினம் தெரியுமோ?

தேர்தல் பரப்புரைகளில் விளம்பரங்கள் மிக முக்கியமானவை. வேட்பாளர்களின் ஆளுமைகளை எடுத்துரைத்து, அவர்களுக்கு வாக்கிடுமாறு கோரும் வகையில் அந்த விளம்பரங்கள் ஊடகங்களில் வெளியாகும். இதுவே வழமை. ஆனால் இன்று ஒரு அச்சு ஊடகத்தில் வெளியான விளம்பரம் , குறித்த கட்சியினதோ, வேட்பாளி னதோ

6

## தேர்தல் முறைப்பாடுகள் 5400

கொழும்பு, ஜூலை 29
நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் தொடர்பாக இதுவரையில் மொத்தமாக 5 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு 1,020 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு 4 ஆயிரத்து 380 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. இந்தநிலையில், கடந்த 26ஆம் திகதி மாலை 4 மணி முதல் மறுநாள் 27ஆம் திகதி மாலை 4 மணி வரையான 24

6

## ஆள் அடையாளம் கட்டாயம்!

கொழும்பு, ஜூலை 29
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச்செல்லும் அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பு நிலையத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதேவேளை வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த தேருநர்கள் வாக்களிக்

6



## தனிமைப்படுத்தப்பட்ட 165 பேர் விடுவிப்பு!!

வவுனியா, ஜூலை 29
வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 165 பேர்

6

## யாழ்.நகரில் நால்வர் கைது

கொடிகாமம், ஜூலை 29

இருவேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச் சாட்டில் நான்கு பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச் சாட்டில் இருவரும் போதைப் பொருள்களை தம்வசம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-159)

## சுற்றிவளைப்பில் 237 பேர் கைது

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப் பொருள் மற்றும் வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 237 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 114 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் வெள்ளம்பிட்டிய, பொரளை, கிரேன்பாஸ், புறக்கோட்டை மற்றும் பாணந்துறை தெற்கு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# உள்ளூராட்சி மன்றங்கள் 24 மணித்தியாலமும் சேவை செய்யவேண்டும்

### வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 29

அதிகாரத்தையும் பலத்தையும் சட்டம் உங்களுக்கு தந்திருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் இன்னும் பயிற்சி பெற்றுக்கொள்ளவில்லை. இருபத்திநான்கு மணித்தியாலங்களும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய திணைக்களமாக உள்ளூராட்சி மன்றங்கள் மாறவேண்டும் என வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரி வித்தார்.

மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கான விடுதிக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உள்ளூரில் இருக்கின்ற மக்களுடைய அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுகின்ற சபைகளாக பிரேதச சபைகளும் இந்த உள்ளூராட்சித் திணைக்களங்களும் இருக்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் அரச பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரேயொரு தலைவர் மேயர் மட்டுமே. வேறு அரச எந்தப் பிரதிநிதியும் பிரதிநிதித்துவமும் அங்கு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மற்றவர்கள் எல்லோரும் இலைமறை காய்களாகத்தான் இருப்பார்கள். இவர்கள் மட்டுமே பலமிக்க அதிகாரமிக்க அரச பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள். இவர்கள் நினைத்தது மட்டுமே அங்கு நடக்கும். ஆனால் அங்குள்ள நிலைமை இங்கு இல்லை. இதனால்தான் மக்களுக்கான ஆட்சி அதிகாரம் ஆட்சி உரிமை பலம் இல்லை. ஆகவே இந்நிலை மாற வேண்டுமானால் இருபத்திநான்கு மணித்தியாலமும் கடமைபுரியம் நிலைக்கு இந்த உள்ளூராட்சி திணைக்களம் மாற்றம்பெற வேண்டும். மக்களிடம் கையளிக்கப்பட்ட அந்த உள்ளூராட்சி முறைமையிலே இன்னும் எமக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. நாங்கள் இன்னும் எங்கள் பலத்தை அறிந்து கொள்ளவில்லை என்பதுதான் எமது பிரச்சினை.

உள்ளூராட்சி திணைக்களங்களுக்கெல்லாம் கட்டடங்கள் கட்டி அந்தத் திணைக்கள அதிகாரிகளுக்கு விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்குத் தேவையான வளங்களை பகிர்ந்தளிப்பதன் நோக்கம், உங்களுடைய பலங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். உங்களுடைய வளங்களை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்கே. நீங்கள்தான் இந்த இடங்களிலே ஆட்சிக்குப் பொறுப்பானவர்கள். இந்த மக்களுடைய தேவைகளைத் தீர்மானிக்க வேண்டியவர்கள். இந்த மக்களின் தேவைகளை வழங்க வேண்டியவர்கள் இருபத்திநான்கு மணித்தியாலமும் அதிகாரங்களை கையில் வைத்திருக்க வேண்டியவர்கள் என்பதை உங்கள் மனதில் புரிந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (ரி1-60)



டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவரும் நமக்காக நாம் அமைப்பின் வடமாகாண தலைவருமான ஆ.நிலான் அவர்களின் ஏற்பாட்டில், டிறிபேக் கல்லூரிக்கு உடல் வெப்பநிலையை அளவிடும் கருவிகள் இரண்டு கல்லூரி அதிபரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன. (ரி3-159)

## ராஜாங்கனைப் பகுதியில் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கம்

அநுராதபுரம், ஜூலை 29

கொரோனா அச்சம் காரணமாக அநுராதபுரம், ராஜாங்கனை பகுதியில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை பல கட்டங்களில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

ராஜாங்கனை பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையால் கடந்த 13 ஆம் திகதி இப் பகுதிக்கான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எனினும் கடந்த 19 ஆம் திகதி முதல் இதுவரை இந்தப் பிரதேசங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் எவரும் இணங்காணப்படவில்லை. இதனை கருத்திற்கொண்டு பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன. (ரி3)

## சில பகுதிகளுக்கு டெங்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 29

நாட்டில் கடந்த நாள்களாக தொடரும் மழையுடனான வானிலை காரணமாக பல மாவட்டங்களுக்கு டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 50 சதவீத டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கத்துக்கு உகந்த களமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. நிலவும் மழையுடனான வானிலை தொடர்ந்தால், டெங்கு நுளம்புகள் பரவு வதைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் தற்போதைய நிலைமை மோசமாகிவிடும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ரி3-22)

## குடாநாட்டில் சிறுதானிய பயிர்ச்செய்கை அமோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

குடாநாட்டில் தற்போது பயறு மற்றும் குரக்கன் போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கை பரவலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயிர்ச் செய்கையாளர்கள் 310 வரையிலான ஹெக்டேயர் நிலப்பரப்பில் இந்த சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதில் 150 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயறும் 160 ஹெக்டேயரில் குரக்கனும் பயிரிப்பட்டுள்ளன. தற்போது மழை பெய்து வருவதனால் இந்த சிறுதானிய பயிர்கள் மிகவும் நல்ல நிலையில் காணப்படுகின்றன என மாவட்ட விவசாய திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வலிகாமம் மேற்கு, வலி. வடக்கு மற்றும் தென்மராட்சி போன்ற இடங்களில் சிறுதானிய செய்கையில் அதிகமான செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ரி1-17)



சர்வதேச நாணய நிதியத்தின் 2019 ஆம் ஆண்டு அறிக்கையை ஆதாரமாகக்கொண்டு தேசிய இறைவரித் திணைக்களம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை எதிர்த்தும், அதிகாரிகளின் இடமாற்றத்தை கண்டித்தும், இறைவரித் திணைக்களத்தின் தொழிற்சங்கங்களால் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (ரி3)

## மத்திய கலாசார நிதியத்தில் நிதி மோசடி

கொழும்பு, ஜூலை 29

மத்திய கலாசார நிதியத்தில் 11 பில்லியன் ரூபா வரை நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. 2016 - 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மத்திய கலாசார நிதியத்தில் இடம்பெற்ற முரண்பாடுகள் மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நியமித்த குழுவினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மத்திய கலாசார நிதியத்தில் பல நிதி முரண்பாடுகள் பதிவாகியுள்ளன எனவும் அந்த குழுவினர் பிரதமரிடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# கூ. பணியாளரின் கொடுப்பனவுகள் தாமதமின்றி வழங்கப்படவேண்டும்

## கூட்டுறவுத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கூட்டுறவுப் பணியாளர்களுக் கான கொடுப்பனவுகள் யாவும் கால தாமதமின்றி அந்தந்தக் காலப்பகுதியில் வழங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவி ருத்தி திணைக்களம் தெரிவித் தது.

அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது;

கூட்டுறவுப் பணியாளர்கள் பாதிக்கப்படாத வண்ணம் வாழ்க்கைச் செலவுப் படி உட்பட ஏனைய கொடுப்பனவு கள் யாவும் உரிய முறையில் அந்தந்த காலப்பகுதியில் வழங்கப்பட வேண்டும். பணியாளர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் வழங்குவ தில் சங்கங்கள் தாமதப்படுத்து வதாலும், காலத்தை இழுத்த டிப்பதாலும் பணியாளர்களே பெரிதும் பாதிக்கப்படு கின்றனர்.

இக்கொடுப்பனவு விடயங்க ளில் சங்க நிர்வாகங்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். பணியாளர்களுக்கான கொடுப் பனவு விடயங்களில் அநேக மான கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறிப்பாக மாதாந்தம் வழங்கப் படும் பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவு படி அந்தந்த மாதங்களில் கணக் கிட்டு வழங்கப்பட வேண்டும். படிகள் யாவும் பணியாளர்க ளுக்கு மாதாந்தச் சம்பளத்து டன் இணைந்து வழங்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர்களுக் கான கொடுப்பனவுகளை வழங்குவதில் காலத்தை இழுத்தடித்து அவற்றை உரிய நேரத்தில் வழங்காததனால் பணித்தொகுதி பெரிதும் பாதிக்கப்படும். இப்படிப் பட்ட கொடுப்பனவு விடயங்க ளில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் வரும் காலத்தில் அதிக கவனம் செலுத்தும்- என்றுள்ளது. (ஐ-17)

# ரி56 துப்பாக்கியுடன் ஒருவர் நேற்று கைது

கொழும்பு, ஜூலை 29

ரி56 ரக துப்பாக்கி மற்றும் அதற்குரிய 22 ரவைகளுடன் வெல்லவ பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழு உறுப்பின ஒருவருடைய தகவலுக்கு அமைய மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே துப்பாக்கி உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

வீட்டுத் தோட்டத்தில் பிளாஸ்டிக் வாளியில் கிரீஸ் இட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

பேலியகொடை பகுதியில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த மல்வத்தே மஞ்சு என்பவருக்குச் சொ தமான துப்பாக்கியே கைப்பற்றப்பட்டுள்ள தாக பொலிஸ் விசேட அதிரடிப்படை குறிப் பிட்டுள்ளது. குற்றச்செயலுக்கு பயன்படுத் தப்பட்ட பின்னர், கைது செய்யப்பட்டவரி டம் நேற்று அந்தத் துப்பாக்கி வழங்கப்பட் டுள்ளது என்று விசாரணையில் தெரியவந்து ளது. கைதுசெய்யப்பட்டவர் மேலதிக விசார ணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக் ளத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த

# கொரோனா தடுப்பதற்கான பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிப்பில் இலங்கை

கொழும்பு, ஜூலை 29

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களை தயாரிக்கும் நடவடிக்கையை இலங்கை ஆடை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை சங்கத்தின் கூட்டமைப்பு வெளியிட்ட தகவலுக்கமைய, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் அமெரிக்கா இணைந்து மேற்கொள்ளும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ், இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் 100 பேருக்கு அமெரிக்க சந்தையில் நுழைய சந்தர்ப்பம் கிடைக்க வுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக சர்வதேச அபிவிருத்திக் கான நிறுவனமான Delloitte Consulting நிறுவனம் நிதி வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், உணவு மற்றும் மருந்து நிர்வாக விதிமுறைகளின்படி தயாரிக்கப்படவுள்ளன எனவும், அவற்றினை இறக்குமதி செய்வதற்காக அமெரிக்காவில் இருந்து சிறப்பு அனுமதி வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)



மன்னார் மாவட்டச் செயலக பணியாளர்களின் பாவனைக்காக சுகாதார முறைப்படி கை கழுவும் இயந்திரம் ஒன்று மன்னார் உலக தரிசன நிறுவனத் தினால் (வேள்ட் விசன்) வழங்கப்பட்டது. மன் னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மன்னார் உலக தரிசன நிறுவனத்தின்(வேள்ட் விசன்) பிரதிநிதி இயந்திரத்தை நேற்றுக் கையளித்தார். (ரி1-56)

# சிறைச்சாலை காவலாளி பணி இடைநிறுத்தம்

குருநாகல், ஜூலை 29

குருநாகல் வாரியபொல சிறைச்சாலை காவலாளி பணியில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளார்.

சிறைக்கைதிகளுக்கு போதைப்பொருள்களை விநியோகித்த குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் பணி இடைநீக்கம் செய்யப்பட் டுள்ளார்.

விசாரணையின் போது, சிறைக்கைதிகள் வழங்கிய தகவலுக்கமையவே சிறைக் காவ லாளி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள னர் என்றும், அவர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ரி3)

# கலால்துறை அதிகாரி உட்பட இருவர் கைது



உஸ்வட்டகெட்டியாவ பகுதியில் கலால் துறை அதிகாரி உட்பட இருவர் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை உஸ்வட்டகெட்டியாவ, பாமுனுகம பகுதியில் நடத்தப்பட்ட சோத னையின் போது, சட்டவிரோத மதுபானம் மற்றும் ஒரு தனியார் நிறுவனத்திற்கு சொந்த மான எத்தனோல் ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டுகளுக்காக இவர்கள் கைதுசெய் யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 180 மில்லி சட்டவிரோத மதுபானம் மற்றும் 5 போத்தல் எத்தனோல் ஆகியவற்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (ரி3)

# முல்லைத்தீவில் விரைவில் ‘சித்தி பல்கலைக்கழகம்’

## விரைவில் அமைக்கப்படும் என்கிறார் ஆளுநர்

பல்கலைக்கழக கல்வியை விரிவுபடுத்தும் நோக்கில் முல்லைத்தீவில் பல்கலைக்கழ கம் விரைவில் அமைக்கப்பட வுள்ளதோடு அதற்கு மாணவர் களை உள்வாங்குவதற்கு பிரத்தியேக முறை பின்பற்றப்படவுள்ளது என்று வடக்கு ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். அண் மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மன்னார் பரிகாரக்கண்டல் அரச தமிழ்க் கலவன் பாடசா லையின் தொழில்நுட்பக் கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

தற்போது அரசாங்கம் பல்க லைக்கல்விக்காக இன்னுமொரு செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. “சித்தி பல்கலைக்கழகம்” என்ற ஒன்று உருவாக்கப்படப்போகிறது. இதுவரை வெட்டுப்புள்ளிகள் ஊடாக பல்கலைக்கழகங்க ளுக்கு மாணவர்களை உள்வாங் கும் முறை இருக்கிறது.

அதாவது 20சதவீதமான மாண வர்களே பல்கலைக்கழகங்க ளுக்குள் உள்வாங்கப்பட்டார் கள். இந்த “சித்தி பல்கலைக்கழ கத்தில்” நீங்களாகவே விரும் பிய துறைகளில் விண்ணப்பித்து இணைந்து கொள்ள முடியும். அந்தப் பல்கலைக்கழகத்தை முல்லைத்தீவு மாவட் டத்தில் அமைப்பதற்கான செயற்பாடு கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தி யடைந்த மாணவர்கள் இல்லா மல் நாங்கள் எந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கினாலும் அதனால் பயனடையப்போ வது நமது மாகாணத்தைச் சார்ந்தவர்களாக மட்டும் இருக்கப்போவதில்லை. ஆகவே எமது மாணவர்கள் கல்வித்தகைமையை உயர்த்திக் கொள்ள வேண்டும். உங்கள் ஒளிமயமான எதிர்காலத்துக் காக உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். அதற்கான வளங்களைத் தருவதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ரி1)





### சித்தவைத்திய திணைக்களம் நினைத்தால்

# மூலிகைப் பொருள்களை மக்களே தயாரிக்கலாம்

### வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வட மாகாண சித்த வைத்திய திணைக்களம் நினைத்தால் மக்களைக் கொண்டே மூலிகையி னாலான பொருள்களைத் தயா ரித்து மக்கள் பாவனைக்காக விநியோகிக்க முடியும். இதன் மூலம் வாழ்வாதாரத்திற்காக ஏங்குகின்ற மக்களுக்கு வாய்ப்ப ளிக்க முடியும் என்று வடமா காண ஆளுநர் பீ.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

மன்னார்- பள்ளமடு கிராமிய சித்த மருத்துவமனையை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

சித்த வைத்தியத் துறையை வளர்க்க வேண்டுமென்ற சிந் தனையில் வட மாகாண சபை ஆர்வமுடன் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சியாகவுள்ளது. நோயின் தன்மைகளையும் அதற்குரிய மருந்தையும் உணவுப் பழக்கத் தையும் சரியாகச் சொல்லுகின்ற ஒரு வைத்திய முறைதான் இந்த சித்த வைத்திய முறை. இவற் றைப்பற்றிய சரியான புரிதலை மக்களுக்கு கொண்டு செல்ல வைத்தியர்கள் முயற்சி எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு குறிப்பாக இளைய தலைமுறைக்கு இம்மருத்துவமு றையில் நம்பிக்கை ஏற்படும். வட மாகாணத்தில் இருக்கும் இந்த சித்த வைத்தியத் திணைக்களம் நினைத்தால் மக்களைக் கொண்டே மூலிகையினாலான பொருட்களைத் தயாரித்து மக்கள் பாவனைக்காக விநியோ கிக்க முடியும். இதன் மூலம் வாழ்வாதாரத்திற்காக ஏங்குகின்ற மக்களுக்கு வாய்ப்பளிக்கின்ற சந்தர்ப்பமாகவும் அமையும். தகுந்த பொருள்களைப் பெற் றுக்கொள்ள விரும்புகிற மக்களுக் கும் நல்ல சந்தர்ப்பமாகவும் அமையும். எனவே, இந்த சித்த வைத்தியத்துறை அதனோடு சம்பந்தப்பட்ட பல்வேறு பிரிவு களை மக்கள் மயப்படுத்த வேண் டும். அதற்கான முயற்சிகளை சித்த மருத்துவத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ள வேண் டும். எனத் தெரிவித்தார். சித்த மருத்துவமும் கொரோனாவுக்குப் பின் வாழ்க்கை முறையும் என்ற தலைப்பில் உருவான இறுவட் டையும் ஆளுநர் வெளியிட்டு வைத்தார். நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர், சுகாதார சுதேச மருத்துவம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் மற்றும் உத்தியோ கத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ரி1)

### கிளிநொச்சியில்

# நிலக்கடலை அறுவடை விழா



கிளிநொச்சி, ஜூலை 29

லங்கா ஜம்போ இன நிலக்கடலை விதை உற்பத்தி திட்டத்தின் அறுவடை விழா கிளி நொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தலைமை யில் திருவையாறு கிராமத்தில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்றது. அறுவடை விழாவில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உலக வங்கி நிதி அனுசரணையில் விவசாயத்தை நவீனமயமாக் கல் திட்டத்தின் ஓர் அங்கமாக நிலக்கடலை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் விவசாயி களின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கி லும் திருவையாறு மற்றும் கனகாம்பிகைகுளம் பிரதேசங்களில் "லங்கா ஜம்போ" இன நிலக்க டலை விதைகள் தெரிவுசெய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கு கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தன. பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் உள்ளீடுகளாக 1/2 ஏக்கர் விஸ்தீரணத்துக்கான 20 கிலோ ஜம்போ நிலக்க டலை விதையும், 25கிலோ ஜிப்சமும், மின்சார நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கி வைக்கப் பட்டு தற்போது நிலக்கடலை விதைகள் அறு வடை செய்யப்படுகின்றன. விதை அத்தாட்சிப் படுத்தும் சேவையாளர்களினால் பயிற்செய்கை காலப்பகுதிகளில் கண்காணிப்பு கள விஜயமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அறுவடை செய்யப்படும் நிலக்கடலை விதை கள் உற்பத்தி செய்கையை மேலும் அதிகரிப்ப தற்கு ஏதுவாக இரணைமடு நீர்ப்பாசனக்குளத் தின் திருவையாறு ஏற்றுநீர்ப்பாசன நிலங்களி லும், கனகாம்பிகைக்குள புவியீர்ப்பு நீர்ப்பா சனத்தின் கீழும் வர்த்தக ரீதியிலான "லங்கா ஜம்போ" நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட வுள்ளது. மேலும் முத்தரப்பு ஒப்பந்த அடிப்ப டையில் ஸ்கான்மக்கி நிறுவனம் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் முதற்தடவையாக மேற்கொள் ளப்பட்டு வெற்றிகரமாக அறுவடை செய்யப் பட்ட இந்த "லங்கா ஜம்போ" நிலக்கடலை உற் பத்தி செய்கை கிளிநொச்சி மாவட்ட விவசாயி களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் மட்டுமன்றி இச்செய்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வத்தினை தூண்டி யுள்ளது என்று விவசாயிகள் கருத்து தெரிவித்தனர். (ரி1-222)



# இடியுடன் கூடிய மழைக்கு சாத்தியம்

நாடு முழுவதும், குறிப் பாக நாட்டின் தென் மேற்கு பகுதியில் மழை யுடனான வானிலை சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின் றது என வளிமண்டலவி யல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய் யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகா ணங்களிலும் திருகோண மலை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க் கப்படுகின்றது.

தென் மாகாணத்திலும் பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்க ளிலும் மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப் போது மணித்தியாலத் துக்கு 60-70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப் படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிக மாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

கடற்பரப்புகள் அவ் வப்போது கொந்தளிப் பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப் படும். மீனவ சமூகமும் கரையோரப் பிரதேசங்க ளில் வசிக்கும் பொதுமக் களும் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக் கப்பட்டுள்ளனர். (ரி3)

# இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடு மீண்டும் ஆரம்பம்



கொழும்பு, ஜூலை 29

கொவிட் 19 தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத் துவரும் செயற்பாடு ஜூலை 31 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட வுள்ளது. அதன்படி ஜூலை 31 மற்றும் ஒகஸ்ட் 1 ஆம் திகதிகளில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் சிக்கியுள்ள சுமார் 600 இலங்கையர் கள் இரண்டு விமானங்களில் நாட்டை வந்தடையவுள்ளனர் என ஜனாதிபதி யின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ் தெரிவித்துள் ளார். மேலும் சில விமானங்கள் சவூதி அரேபியா மற்றும் ஜோர்தான் உள் ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந் தும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையர்களில் பெரும் பான்மையானவர்கள் வேலை மற்றும் வசிப்பிடங்களை இழந்துவிட்ட மையால், அவர்களுக்கு உதவுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும், ஜனாதிப திக்கு இது தொடர்பில் விளக்கம ளிக்கப்பட்டுள் ளதாகவும் ஜனாதி பதியின் மேலதிக செயலாளர் தெரி வித்துள்ளார். (ரி3)

# குசல் மெண்டிஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## இலங்கை கிரிக்கெட் நிறுவன உயர் அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

இலங்கை கிரிக்கெட் வீரர் குசல் மெண்டிஸ் செலுத்திய வாகனத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களை கண்டு கொள்ளாமல் விட்டால் அது பிழையான எடுத்துக்காட்டாக மாறிவிடும். இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் கிரிக்கெட் வீரர்களுக்கு இடையில் உள்ள ஒப்பந்தங்களுக்மைய இவ்வாறான சம்பவத்தில் ஒழுக்காற்று பரிசோதனை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு அதிகாரம் உள்ளது என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பாணந்துறையில் குசல் மெண்டிஸின் வாகனத்தில் மோதுண்டு 64 வயதான நபர் ஒருவரே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபா பணமும் அவரின் இறுதிக் கிரியை செலவினத்திற்காக 95 ஆயிரம் ரூபாவும் குசல் மெண்டிஸ் வழங்கியுள்ளார். அத்துடன் 20 இலட்சம் ரூபா பெறுமதியான காணியும் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு வழங்க குசல் மெண்டிஸ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)



# ரிஷாத்துக்கு எதிராக விசாரணை நடக்கும்!

## பொலிஸார் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 29

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பாகக் கடந்த ஆண்டு ஜூன் 20ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் துறையிலிருந்து பெறப்பட்ட அறிக்கை செல்லுபடியாகாது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் ரிஷாத் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவத்தில் சந்தேகநபர் அல்லர் என்றும், இதனால் அவருக்கு எதிராக எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

அந்தக் காலகட்டத்தில் வெளிவந்த தகவல்களின்படி, பதியுதீன் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் சந்தேகநபர் அல்லர், அவருக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த அறிக்கை ஒரு வருடத்துக்கு முன்னர் வெளியிடப்பட்டது. அதனால் இந்த அறிக்கை செல்லுபடியாகாது. இந்நிலையில் பதியுதீன் மற்றும் பிறருக்கு எதிரான விசாரணை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்- என்றார். (எ)

# காலையிலேயே வாக்கிடுங்கள் மாலையில் எதுவும் நடக்கலாம்

## பிரதமர் மஹிந்த ஆருடம்

கொழும்பு, ஜூலை 29

நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு தினமன்று காலையிலேயே சென்று மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவத்தகமவில் நடத்திய மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



நாட்டில் தற்போது நிலவும் நிலைமைகளுக்கமைய மாலை வரை என்ன நடக்குமோ என்று கூற முடியாது. பொருளாதார ரீதியில் நாங்கள் அனைத்து பகுதிகளிலும் மேல் நோக்கி வந்திருந்தோம். ஆனால் தற்போது நாடு வங்குரோத்து நிலையில் உள்ளது.

வாக்குகளை வீணடிக்க வேண்டாம். காலையிலேயே வாக்களிக்கும் நிலையங்களுக்குச் சென்று விடுங்கள். காலையிலேயே வாக்களித்து விட வேண்டும். என்றார். (எ)

# சிறுபான்மையினரை காக்கும் கட்சி ஐ.தே.க.

## அதன் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29

ஐக்கிய மக்கள் சக்தியின் நடத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு தீங்கு விளைவிக்கும் முயற்சி என மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது எனக் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

115 உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை நிறுத்திவைக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று செவ்வாய்க்கிழமை எடுத்த முடிவை வரவேற்று அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

2020 பொதுத் தேர்தலுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பாக வேட்புமனு தாக்கல் செய்த 54 பேரும் மேலும் 61 உள்ளூராட்சி உறுப்பினர்களும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் வெளியேற்றப்பட்ட கட்சி உறுப்பினர்களுக்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும், அவர்களின் பெயர்கள் இன்று வெளியிடப்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:



ஐக்கிய தேசியக் கட்சியே சிறுபான்மையினரையும் பாதுகாத்து வருகின்றது, தொடர்ந்து அவ்வாறே செயற்படும்.

முஸ்லிம் மற்றும் தமிழ்ச் சமூகத்தினர் பாதுகாக்கப்பட வேண் டும். இலங்கை அடையாளத்தைக் கொண்ட நாட்டின் ஒரே அரசியல் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்த முடியாது. நாட்டின் 7 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி இழக்கப்பட்டுள்ளது. அரச வருவாய் 50 வீதமாகக் குறைந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த இந்த அரசுக்குப் பலம் இல்லை ஐக்கிய தேசிய கட்சிக்கு மட்டுமே அந்த வலிமை உள்ளது-என்றார். (எ)

# இந்தியாவிடம் இருந்து மேலும் ஒரு பில். டொலர்கள் இலங்கைக்கு?

கொழும்பு, ஜூலை 29

இந்தியாவிடம் இருந்து மேலும் ஒரு பில்லியன் டொலர்களை பெறும் பேச்சுவார்த்தையில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே இந்திய அரசாங்கம் கையெழுத்திட்டுள்ள 400 மில்லியன் நாணய மாற்று உடன்படிக்கைக்கு அப்பால் இந்த மேலதிக 1 பில்லியன் டொலர்களை இந்தியாவிடம் இருந்து இலங்கை எதிர்பார்க்கிறது. இது தொடர்பில் இந்திய மத்திய வங்கியின் அதிகாரிகளும் இலங்கையின் மத்திய வங்கியின் அதிகாரிகளும் பேச்சுக்களை நடத்திவருகின்றனர்.

இதன் மூலம் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இலங்கை மத்திய வங்கிக்குத் தேவையான குறுகிய கால நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளமுடியுமென தெரிவிக்கப்படுகிறது. (ரி3)

# வடக்கின் மீது அதிக கவனம்

## மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 29



எந்தவகையான ஊடகங்களும் எதிர்வரும் 3ஆம் 4ஆம் திகதிகளில் விளம்பரமோ அல்லது ஊக்கமளிக்கும் விடயங்களையோ பிரசுரிக்க முடியாது. இருப்பினும் வடக்கு மாகாணம் தனி நிர்வாகமாக செயற்படுவதால் இம்முறை விசேட கவனம் செலுத்தப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி நாடாளுமன்ற பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், பிரசாரத்தின் போதான ஊடக அறிக்கையிடல்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ரி1)

# ஈ.பி.டி.பி...

இவ்வாறு ஈ.பி.டி.பி. அமைப்பின் நீண்டகால உறுப்பினர் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட சுப்பையா பொன்னையா என்பவர் தெரிவித் தார். இவர் தனது இயக்கப் பெயர் சதா என்றும் குறிப்பிட்டார். யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது: சுமார் 16 ஆண்டுகளாக நான் ஈ.பி.டி.பி. அமைப்பில் இருந்தேன். ஈ.பி.டி.பியினர் ஆரம் பத்தில் இருந்து செய்த அனைத்துமே எனக்குத் தெரியும். அவர்கள் கொலை செய்தமை, பணம் கப்பம் பெற்றமை அனைத்தும் தெரியும். நான் ஈ.பி.டி.பி. கட்சியில் இருக்கவில்லை, ரெலோவி லேயே இருந்ததாக அறிக்கை விட்டிருந்தார் களாம். ஆனால் என்னிடம் அடையாள அட்டை, ஈ.பி.டி.பியால் வழங்கப்பட்ட ஆவ ணங்கள் இருக்கின்றன. பலாலியில், பாதுகாப்பு அமைச்சில் எனது பெயர் இருக்கின்றது. ஈ.பி.டி. பியினரிடம் இன்னமும் ஆயுதங்கள் இருக்கின் றன. என்னால் அவை எங்குள்ளன என்பதைக் கூற முடியும். ஈ.பி.டி.பியினர் யாரைக் கொலை செய்தனர், கடத்தினர் என்பது எனக்குத் தெரி யும். எனக்குத் தெரிந்தவற்றை நான் முறையிட்டி ருந்கின்றேன். அதுதொடர்பாகவும் எந்த நடவ டிக்கையும் எடுக்கப்படவில்லை. உதயன் தாக்குதல் சம்பவம் நடந்த காலத்திலும் நான் இங்கு இருந்தேன். அந்த நேரம் 6 மணியளவில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தது. அப்போது வாகனங்கள் எனது பொறுப்பில் இருந்தன. சுமார் 7.30 மணியளவில் ஒருவர் என்னி டம் உடனடியாக வாகனம் தேவை, 512 பிரி கேட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று தெரிவித் தார். நான் என்ன பிரச்சினை என்று கேட்டேன். அவர் சொல்லவில்லை. நான் டக்ளஸின் அனு மதி இல்லாது வாகனம் தர முடியாது என்று தெரிவித்துவிட்டேன். அவர் நடந்தவற்றைச் சொன்னார். ஈ.பி.டி.பியினர் என்று தெரியாது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டனர். அதில் இருவர் காயமடைந்து விட்ட னர். இந்தச் சம்பவத்துக்கு ஸ்ரீதர் தியேட்டரில் இருந்து ஆள்கள் செல்லவில்லை. வெளியிடங்க ளில் இவற்றுக்கென ஆள்கள் இருக்கின்றனர். இவற்றுக்கு சாள்ஸ் என்பவரே தலைமை வகித் தார். உதயன் தாக்குதலுடன் தொடர்புடைய இருவர் இப்போது இல்லை. ஒருவர் இருக்கின் றார். அவரின் பெயரை இப்போது குறிப்பிட விரும்பவில்லை. உதயன் பத்திரிகை நிறுவ னத்துக்கும் தாக்குதல் நடத்தியவர்களைத் தெரியும். 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எமக்கு இராணுவச் சம்பளம் வழங்கப்படும் என்று கூறப் பட்டது. ஆனால் எமக்கு அவ்வாறு வழங்கப்ப டவில்லை. அந்தக் காலப் பகுதியில் எமக்கு வழங்கப்பட்ட சம்பவம் மாதத்துக்கு 50 ரூபா மட்டுமே. பின்னர் எமக்குக் குடும்பச் செலவு என்று தெரிவித்து ஆயிரத்து 500 ரூபா, இரண் டாயிரம் ரூபா என்று வழங்கப்பட்டது. ஈ.பி.டி.பியினரை ஊர்காவற்றுறையில் கள்ள வாக்கிட்டே நாடாளுமன்றத்துக்கு அனுப்பி னோம். நானே 100 வாக்குகளுக்கு மேல் போட் டிருந்தேன். அவர்கள் இப்போது கோடீஸ்வரர்க ளாக இருக்கின்றனர், ஆனால் நாம் இன்னமும் பிச்சை எடுப்பவர்களாகவே இருக்கின்றோம். நான் எனக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைகளை வழங்க வேண்டும் என்று பல தரப்பினரிடம் முறையிட்டிருந்தேன். ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பொலிஸ் தலைமையகத்தில் 11 முறைப் பாடுகளைச் செய்திருந்தேன். அவற்றுக்கும் உரிய நடவடிக்கைகள் இல்லை-என்றார். (எ)

# சங்கிலி...

பெருங்குளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் அனும திக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி மருத்துவமனை யில் இளைஞரிடம் பொலி ஸார் வாக்குமூலத்தையும், முறைப்பாட்டையும் பெற் றுள்ளனர். (அ,9)

# கொரோனாப் பேரலை...

வில் ஊடக சந்திப்பில் தெரிவிக்கையில்;
"... உலக நாடுகள் அனைத்தும் முதற் கட்ட கொரோனா அலையில்தான் உள்ளன. இன்னொரு மிகப் பெரிய அலையாக கொரோனா விரைவில் மாற்றம் அடையும். கொரோனா பாதிப்பு என்பது மேலும் அதிகரிக் கும். இது ஒன்றும் பருவ காலத் தொற்றுநோய் அல்ல. அமெரிக்காவின் கோடை காலத்தில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும்.
கொரோனா வைரஸ் என்பதை அனைத்து காலநிலைகளையும் எதிர் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. கொரோனாவை கட்டுப்படுத்த சகலவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பின்பற்ற வேண்டியது அவசியம்..." என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# தூக்கில் தொங்கி...

சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ள னர். அறிக்கையைப் பார்வை யிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கைதாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சடலம் சாவகச் சேரி மருத்துவமனை சவச்சா லைக்கு பொலிஸாரால் கொண் டுசெல்லப்பட்டது. (அ-9)

# ஐவருக்கு...

பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது: இந்த ஐவரில் ஒருவர் சேனபுர மத்திய நிலையத்தில் பணியாற்றும் உறுப்பினராவார். ஏனைய 4 பேரும் வெளிநாட்டில் இருந்து வருகைதந்த பின்னர் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் உள்ள நபர்களாவர்.(அ)

# தேர்தல்...

சேனாரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இருப்பினும் இது தொடர்பில் இறுதி தீர்மானம் இன்று புதன்கிழமை மேற்கொள்ளவிருப்ப தாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் தெரிவித்துள்ளார்.
பொதுத் தேர்தலுக்காக 75 ஆயிரம் பொலிஸாரையும் 9 ஆயிரம் சிவில் பாதுகாப்பு படையினரையும் சேவை யில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக வும் குறிப்பிட்டார்.
கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள சுகாதார வழிமு றைகள் தேர்தல் காலத்தில் பின்பற் றப்படுகின்றனவா என்பது பற்றி பாதுகாப்புப் பிரிவினர் மிகுந்த கவனம் செலுத்தவுள்ளார் என்றும் அவர் கூறினார். (அ)

# தேர்தல் முறைப்பாடுகள்...

மணித்தியால காலப்பகுதியில் மட்டும் 164 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 09 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 155 முறைப்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன.
இதேவேளை, வன்முறைகள் தொடர்பில் இதுவரையில் எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை எனவும், தேர்தல்கள் ஆணைக் குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ,22)

# ஆள் அடையாளம்...

கச்செல்லும் போது கடவுச்சீட்டை எடுத்து வரும் தேவைப்பாடு உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

# இலஞ்சம்...

பகுதியில் முன்னெடுக்கப்பட்ட 17 சுற்றி வளைப்புகளில் 21 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார். (அ)

# தனிமைப்படுத்தப்பட்ட...

இன்று விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொரோனா தொற்றால் பாதிக் கப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ,110)

## புதினம் தெரியுமோ

ஆளுமை, அருமை பெருமை என்பவற்றைக் கூறாமல் சகட்டுமேனிக்கு தேர்தலில் போட்டியிடும் முக்கிய கட்சிகளையும், அவற்றின் வேட்பாளர்களை யும் இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. அதன்மூலம் அந்த விளம்பரத்தை வெளியிட்ட வேட்பாளரும், கட்சியும் சொல்ல வருவதை மக்கள் மிக நன்றாகவே புரிந்து கொண்டுள்ளனர். அரச பங்காளியான அந்தக் கட்சி ஒருபோதும் யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஆசனம் எதனையும் பெறப்போவதில்லை என்பது அதில் போட்டியிடும் சகலருக்கும் நன்கே தெரியும். அப்படி இருந்தும் அதி களவில் விளம்பரங்களுக்கு பணத்தை வாரிக் கொட்டுவதும் அந்தக் கட்சிதான். ஏனெனில் தேர்த லில் தோற்றாலும், எவ்வளவு பணத்தை செலவிட் டோம் என கோத்தாபய அரசுக்கு தெரியப்படுத்தி, பின்னாட்களில் அரசின் அனுசரணையை தங்கள் தேவைகளை நிறைவேற்றப் பயன்படுத்துவர். ஆகவே இப்போது செலவிடப்படும் பணம் அவர்களுக்கு ஒரு வியாபார மூலதனம் தான். இந்த மூலதனத்தில் தான் தமிழ்த் தேசியக் கட்சிகளையும், அவற்றின் வேட்பா ளர்களையும் எவ்வளவு இழிவுபடுத்த முடியுமோ அந்தளவுக்கு இழிவுபடுத்தியுள்ளார் அந்த வேட்பா ளர். இதைப் பார்த்த பொதுமகன் ஒருவர் இப்பிடி மற் றக் கட்சிகளும் இவைக்கு அடிக்க வெளிக்கிட்டால் உந்த விளம்பரம் போட்டவர் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு தான் ஓடுவார் என்று சொல்லிச் சிரித்தார். முதலில் எங்கள் முதுகுக் கறைகளைப் பார்ப்போம். பின்னர் அடுத்தவர்களின் கறைகளைப் பற்றிப் பேசலாம்.
பட்சி

# ட்ரம்பின் ஆலோசகருக்கு கொரோனாத் தொற்று



வொஷிங்டன், ஜூலை 29
அமெரிக்கஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் உயர்மட்ட உதவியாளருமான ரொபட் ஓ பிரையனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ட்ரம்ப்பிற்கு மிகவும் நெருக்கமான அதிகாரியான ரொபட் ஓ பிரையன் தற்போது வீட்டிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து நாடு திரும்பிய ரொபட் ஓ பிரையனும் அவரது மனைவியும் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர். மேலும், கடந்த 10 ஆம் திகதி இறுதியாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை ரொபர்ட் ஓ பிரையன் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி1)

Google

## 2021 ஜூலை வரை வீட்டிலிருந்து பணி

### கூகுள் நிறுவனம் அனுமதி

அடுத்த வருடம் ஜூலை மாதம் வரை தமது ஊழியர்கள் வீட்டில் இருந்து பணிபுரிவதற்கு கூகுள் நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது. கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக குறித்த தீர்மானம் பெறப்பட்டுள்ளது. கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி சுந்தர் பிச்சை மற்றும் உயர் மட்ட நிர்வாகிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து குறித்த தீர்மானம் பெறப்பட்டுள்ளது. கூகுள் நிறுவனம் இவ்வருடம் பல பகுதிகளில் தமது அலுவலகங்களை திறக்க தீர்மானித்திருந்த நிலையிலேயே வைரஸ் தொற்று ஏற்பட்டது. கொரோனா வைரஸின் தாக்கமானது அடுத்த வருட ஆரம்பம் வரை நீடிக்கும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே 2021ஆம் ஆண்டு வரை தமது ஊழியர்களுக்கு வீட்டில் இருந்து பணிபுரிவதற்கான அனுமதி கூகுள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (ரி1)

பல மில்லியன் டொலர் நிதி மோசடி:

# முன்னாள் மலேஷிய பிரதமருக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை

- அந்த நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பு
- 49 மில்லியன் டொலர் அபராதம்
- வயது காரணமாக சவுக்கடி தள்ளிவைப்பு

கோலாலம்பூர், ஜூலை 29
மலேசிய முன்னாள் பிரதமர் நஜீப் துன் ரசாக் பதவியில் இருந்தபோது தமது அதிகாரத்தை தவ றாகப் பயன்படுத்தியமை நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அந்நாட்டின் கோலாலம்பூர் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதையடுத்து நஜீப் துன் ரசாக்குக்கு 12 ஆண்டுகள் சிறை மற்றும் 49 மில்லியன் டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நஜீப் துன் ரசாக் மலேசிய அபிவிருத்தி சபையின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி முறைகேட்டில் ஈடுபட்டார் எனவும், அதிகளவு சொத்துக் குவித்தார் எனவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. அரசாங்க நிதி மோசடி தொடர்பில் அவரிடம் சுமார் 16 மாதங்களுக்கு முன்பு விசாரணை ஆரம்பமாகிய நிலை யில் அவரது குற்றம் நிரூபிக்கப் பட்டுள்ளது என்று நீதிமன்றம் நேற்று தீர்ப்பை அறிவித்துள்ளது. 1 எம்.டி.பி. யின் ஒரு பிரிவான எஸ்.ஆர்.சி இன்டர்நேஷனலில் இருந்து 42 மில்லியன் ரிங்கிட்களை (9.8 மில்லியன் டொலர்) தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் திருப்பியதில் அவர் வகித்த பங்கு தொடர்பாக அவருக்கு



எதிராக ஏழு குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. குற்றச்சாட்டுகளில் மூன்று பண மோசடி, மூன்று குற்றவியல் நம்பிக்கை மீறல் மற்றும் அதிகார துஷ்பிர யோகம் ஆகியவை அடங்கும். "வழக்கு ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டமையினால் நீதிபதி மொஹமட் நஸ்லான் கசாலி மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தார். சிறைத் தண்டனையைத் தவிர, 210 மில்லியன் ரிங்கிட் (49 மில்லியன் டொலர்) அபராதமும் செலுத்த நஜிப்துக்கு உத்தரவிட்டார். அதுதவிர குற்றச்சாட்டு கள் ஒரு சவுக்கடி தண்டனையையும் கொண்டிருந்தாலும், 67 வயதான முன்னாள் பிரதமர் என்ற காரணத்தினால் இந்த தண்டனை தள்ளிவைக்கப்பட்டது. (ரி1)

# "நான் நலம்"



கொரோனாவால் பாதிக்கப்பட்ட விவரம் வெளியே தெரியும் முன்பே அதிலிருந்து குணமடைந்துள்ளார் நடிகர் விஷால்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றுக்காக ஆயுர்வேத சிகிச்சை பெற்றதாக அவர் தெரிவித்துள்ளார். அதிலும் ஒரே வாரத்தில் குணமடைந்துள்ளாராம்.

இதுதொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், தனது தந்தையும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

"எனது மேலாளருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு இருந்தது. இதனால் மூவரும் ஆயுர்வேத மருந்துகளை எடுத்துக் கொண்டோம். அதன் பலனாக ஒரே வாரத்தில் அபாயக் கட்டத்தை தாண்டிவிட்டோம். தற்போது நலமாக உள்ளோம் என்ற தகவலைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்," என்று விஷால் தெரிவித்துள்ளார்.

# என்றென்றும் கடன்பட்டிருக்கிறேன்



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஐஸ்வர்யா ராய் மற்றும் அவரது மகள் இருவரும் குணமாகி வீடு திரும்பியுள்ளனர். அவர் தனது ரசிகர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் நன்றி சொல்லி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். என் மீதும், அமிதாப் அப்பா, அபிஷேக் மற்றும் எனது அன்பு மகள் மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பு, அக்கறை மற்றும் உங்கள் அனைவரின் பிரார்த்தனைக்காக நன்றி என்று பதிவிட்டுள்ளார்.

மேலும், என்றென்றும் கடன்பட்டிருக்கிறேன். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார். உங்கள் மீது என் அன்பு எப்போதும் இருக்கும். உங்கள் அனைவரின் நல்வாழ்வுக்காக பிரார்த்திக்கிறேன். உண்மையிலேயே நன்றாக இருக்க இதய பூர்வமாக வேண்டுகிறேன். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக- என்றார்.

ஐஸ்வர்யா மற்றும் ஆரத்யா குணமாகி வீடு திரும்பிய நிலையில் அமிதாப் மற்றும் அபிஷேக் நானாவதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து அபாரம் சுருண்டது மே.தீவுகள்

லண்டன், ஜூலை 29

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில், இங்கிலாந்து அணி 269 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2;1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

கடந்த 24ஆம் திகதி மன்செஸ்டர் ஓல்ட் ட்ரப்போர்ட் மைதானத்தில் ஆரம்பமான இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 369 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.





அதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஒல்லி போப் 91 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 67 ஓட்டங்களையும், ஸ்டுவர்ட் பிரோட் 62 ஓட்டங்களையும், ரொறி பர்ன்ஸ் 57 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், கெமார் ரோச் 4 இலக்குகளையும், கெப்ரியல் மற்றும் ரொஸ்டன் சேஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஜேஸன் ஹோல்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 197 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அந்த அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ஹோல்டர் 46 ஓட்டங்களையும், டவ்ரிச் 37 ஓட்டங்களையும், ஜோன் கெம்பல் 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

172 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 2 இலக்குகள் இழப்புக்கு 226 ஓட்டங்களை பெற்றிருந்தபோது, தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடை நிறுத்தியது. மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 399 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ண யிக்கப்பட்டது. இங்கிலாந்து அணி சார்பில், ரொறி பர்ன்ஸ் 90 ஓட்டங்களையும், டோமினிக் சிப்ளி 56 ஓட்டங்களையும், ஜோ ரூட் 68 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் சார்பில், ஜேஸன் ஹோல்டர் மற்றும் ரொஸ்டன் சேஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

399 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, வெறும் 129 ஓட்டங்களுக்குச் சுருண்டது. இங்கிலாந்து அணி 269 ஓட் டங்களால் அபார வெற்றிபெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஷாய் ஹோப் 31 ஓட்டங்களையும், ஜெரமைன் பிளக்வுட் 23 ஓட்டங்களை யும் பெற்றனர். இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில், கிறிஸ் வோக்ஸ் 5 இலக்குகளையும், ஸ்டுவர்ட் பிரோட் 4 இலக்குகளையும் சாய்த்தனர். ஆட்டநாயகனாக, இரண்டு இன்னிங்ஸிலும் மொத்த 10 விக்கெட்டுகளை வீழ்த்திய ஸ்டுவர்ட் பிரோட் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் நாயகனாக ஸ்டுவர்ட் பிரோட் மற்றும் மேற்கிந்திய தீவுகள் வீரர் ரொஸ்டன் சேஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதேவேளை, ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசையில் இங்கிலாந்து அணி 226 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

# பிரோட் 500



லண்டன், ஜூலை 29

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிரோட் டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 இலக்குகளை வீழ்த்திய 2ஆவது இங்கிலாந்து பந்துவீச்சாளர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து கைப்பற்ற முக்கிய காரணம் ஸ்டுவர்ட் பிரோட். இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் தொடக்க வீரர் பிராத்வெய்ட் இலக்கை வீழ்த்தி 500 விக்கெட்டுகள் மைல்கல்லை எட்டினார் பிராட்.

இங்கிலாந்தில் முதன் முதலாக 500 இலக்குகளைக் கடந்து சென்றார் ஜேம்ஸ் ஆண்டர்சன், இவரை அடுத்து பிரோட் தற்போது அந்தப் பட்டியலில் இணைந்துள்ளார்.

உலக அளவில் 500 விக்கெட் மைல்கல்லை எட்டிய 7ஆவது பந்துவீச்சாளர் பிரோட். வேகப்பந்து வீச்சாளர்களில் கார்ட்னி வால்ஷ், கிளென் மெக்ரா, ஜேம்ஸ் ஆண்டர்சன் வரிசையில் அடுத்த இடத்தில் பிரோட் இருக்கிறார். முரளிதரன், ஷேன் வார்ன், மெக்ரா, வால்ஷ், ஆண்டர்சன், அனில் கும்ப்ளே ஆகியோர் வரிசையில் தற்போது பிரோட் 7ஆவதாக இணைந்துள்ளார். (எ)

# அசைக்க முடியாத விராட் கோலி

லண்டன், ஜூலை 29

சர்வதேச கிரிக்கெட் சபையின் வெளியிட்ட ஒருநாள் தரவரிசைக்கான பட்டியலில் இந்திய அணித் தலைவர் விராட் கோலி 871 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். 2ஆவது இடத்தில் ரோஹித் சர்மா 855 புள்ளிகளுடன் உள்ளார். மூன்றாவது இடத்தில் பாகிஸ்தான் வீரர் பாபர் அஸாம் 829 புள்ளிகளுடனும், 4ஆவது இடத்தில் 818 புள்ளிகளுடன் நியூஸி வீரர் ரோஸ் டெய்லரும், 5ஆவது இடத்தில் தென்னாபிரிக்க வீரர் டூப்பிளசிஸ் 790 புள்ளிகளுடனும் உள்ளனர்.

6 முதல் 10ஆம் இடங்களில் முறையே ஆஸியின் டேவிட் வோர்னர் (789புள்ளிகள்), 7ஆவது இடத்தில் ஜோ ரூட் (770), 8ஆவது இடத்தில் ஆரோன் பிஞ்ச் (767), கேன் வில்லியம்ஸன் (765), டீ கொக்(755) ஆகியோர் உள்ளனர். பந்துவீச்சாளர்களைப் பொறுத்தவரை முதலிடத்தில் நியூஸிலாந்து வீரர் டிரனட் போல்ட் 722 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். 2ஆவது இடத்தில் இந்திய வீரர் பும்ரா 719 புள்ளிகளுடன் உள்ளார். 3ஆவது இடத்தில் ஆப்கானிஸ்தான் வீரர் முஜிபுர் ரஹ்மான் (701), 4ஆவது இடத்தில் பாட் கம்மின்ஸ் (689), 5ஆவது இடத்தில் ரபாடா (665) உள்ளனர். (எ)

# அயர்லாந்து தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

லண்டன், ஜூலை 29

அயர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் இங்கிலாந்து அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அணியில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் முக்கிய வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர், வேகப்பந்து வீச்சாளர்கள் ஜோப்ரா ஆர்ச்சர், கிறிஸ் வோக்ஸ் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது டெஸ்ட் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட, ஜோ டென்லி அணியில் இடம்பிடித்துள்ளார்.

இயன் மோர்கன் தலைமையிலான அணியில், மொயீன் அலி, ஜோனி பேயர்ஸ்டொவ், டொம் பான்டன், சேம் பில்லிங்ஸ், டொம் கர்ரன், லியாம் டாவ்சன், ஜோ டென்லி, சாஹிப் மக்மூத், அடில் ரஷித், ஜேசன் ரோய், ரீசி டாப்லி, ஜேம்ஸ் வின்ஸ், டேவிட் வில்லி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் ஆட்டம் நாளை 30ஆம் திகதி சவுதம்டனில் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஒருநாள் ஆட்டம் ஒகஸ்ட் முதலாம் திகதியும், மூன்றாவது ஒருநாள் ஆட்டம் 4ஆம் திகதியும் சவுதம்டனில் நடைபெறவுள்ளன. (எ)

# கரீபியன் லீக் அட்டவணை வெளியீடு

லண்டன், ஜூலை 29

நடப்பு ஆண்டுக்கான கரீபியன் பிரீமியர் லீக் ரி20 தொடரின், ஆட்ட அட்டவணையை மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. நடப்பு ஆண்டுக்கான தொடர், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஆறு அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் 33 ஆட்டங்கள் நடைபெற இருக்கின்றன. தாராபோவில் உள்ள பிரையன் லாரா கிரிக்கெட் அகாடமி, போர்ட் ஒஃவ் ஸ்பெயினில் உள்ள குயின்ஸ் பார்க் ஓவல் ஆகிய இரண்டு மைதானங்களில் ஆட்டங்கள் நடைபெற இருக்கின்றன. அரையிறுதி போட்டிகள், இறுதிப் போட்டி லாரா கிரிக்கெட் அகாடமி மைதானத்தில் நடைபெறும். முதல் போட்டியில் கடந்த ஆண்டு இரண்டாவது இடம் பிடித்த கயானா அமேசான் வோரியர்ஸ் - ட்ரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. கொரோனா வைரஸ் தொற்றுக் குப்பின் நடைபெறும் முதல் ரி20 லீக் தொடர் இதுவாகும். (எ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 29.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.